[19th April 1960

(2) Under the existing set-up, the District Co-operative Supply and Marketing Society in each district except Thanjavur and the Tanjore Co-operative Marketing Federation, Ltd., in Thanjavur district are functioning as Government stockholders. Retail distribution is done by authorised distributors appointed by the Collectors. The distributors obtain stocks from the Government stockholder's godown on authorisation issued by the Collector or other authorised officer after pre-payment of cost. There are four such distributors for each taluk, of which, one is a Co-operative Society and the remaining three are private concerns. Each distributor is required to open as many depots as possible subject to a minimum of 5 depots in a deltaic taluk and three depots in non-deltaic taluk.

(3) One half of the total quantity of fertilizers allotted for the taluk, is earmarked for distribution through the Co-operative Societies and the balance is equitably distributed to the other three private merchants.

(4) In the Development Blocks, only Co-operative Societies function as distributors. Fresh appointments of new distributors in other areas is confined only to co-operative institutions if they are available.

(5) Twenty-five per cent of the fertilizers annually allotted to this State under the Central Fertilizer Pool, for distribution under the Government Trading Scheme, is earmarked for distribution to the manure mixing firms for preparation of mixtures.

(6) The retail prices of the fertilizers are fixed throughout the State at uniform rates.

(7) Super-phosphate is being distributed by the manufacturing firms to the consumers through their network of agencies under informal control of the Government.

Appendix III.

[Vide answer to starred question No. 742 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 19th April 1960, page 264 supra.]

(அ) குழந்தைகள் படத் தயாரிப்புக்கு இம் மாநில சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சி—

டில்லியிலிருக்கும் குழந்தைகள் படச் சங்கத்திற்கு ஆலோசனை கூறுவதற்காகவும், குழந்தைப் படங்களை உற்பத்தி செய்வதற்காகவும் இம் மாநில சர்க்கார் சென்னை ராஜ்யக் குழந்தைகள் படக்குழு ஒன்றை அமைத்திருக்கிறது. இக்குழு இதுவரையில் "ஜல் தீப்", "சுக் அண்டு கெக்" என்ற குழந்தைப் படங்களைத் தமிழாக்கியிருக்கிறது. சென்ட்ரல் பாலிடெக்னிக் கல்லூரியின் திரைப்பட உற்பத்திக் கலை மாணவர்கள் தங்கள் பயிற்சியின் ஒரு பகுதியாக "அலாவுதீனும் அற்புத விளக்கும்" என்ற குழந்தைகளின் பொம்மலாட்டப் படமொன்றைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள் ; அதற்கென சுமார் ரூ. 4,040 இதுவரைக்கும் செலவிடப்பட்டிருக்கிறது. இந்தப்படம் சீக்கிரம் தயாராகிவிடும்.

(ஆ) குழந்தைப் படங்களை சென்னைக்கு வெளியே மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் காட்ட எடுத்துக்கொண்ட முயற்சி—

அரசாங்கம் எம்முயற்சியும் இன்னும் எடுக்கவில்லை. ஆனால், ராஜ்யக் குழந்தைகள் படக்குழு தான் எடுத்த இருபடங்களையும் விநியோகஸ்தர் மூலம் எல்லா மாவட்டங்களிலும் காட்ட முயற்சி எடுத்திருக்கிறது.

(இ) இதுவரை தயாரான குழந்தைகள் படங்கள்—

அரசாங்கத்தாரால் தயாரிக்கப்பட்டது ஒன்றுமில்லை. பாலிடெக்னிக் மாணவர்கள் தங்களின் பயிற்சியின் ஒரு பகுதியாக எடுத்துக்கொண்டிருக்கும் மேலே (அ) பிரிவில் குறிப்பிட்ட படத்தைத் தவிர, வேறு எப்படமும் அரசினரால் எடுக்கப்படவில்லை.

(ஈ) அவற்றின் செலவுகள்—

சென்னை ராஜ்யக் குழந்தைகள் படக் குழு "ஜல் தீப்" என்னும் ஹிந்தி குழந்தைப் படத்தை தமிழாக்கம் செய்வதற்கு ரூ. 7,000 மானியமாக அரசாங்கம் வழங்கியுள்ளது. இதைத் தவிர சென்னை சென்ட்ரல் பாலிடெக்னிக் கல்லூரியின் திரைப்பட உற்பத்திக்கலை மாணவர்கள் பயிற்சிக்காக எடுத்துக்கொண்டிருக்கும் "அலாவுதீனும் அற்புத விளக்கும்" என்ற படத்திற்கு இதுவரை ரூ. 4,040 செலவு செய்யப்பட்டிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS